රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/01/01(II)
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.05.19

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**2021.01.01ஆந் திகதிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்கல், தகுதிகாண் அறிக்கை அளித்தல் மற்றும் பிற நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

மேற்படி விடயம் தொடர்பான இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமானது.

02. 2019 ஆம் ஆண்டில் II மற்றும் III ஆம் கட்டங்களாக தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ் பயிலுநர் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள பயிலுநர்களுக்கு ஆரம்பமாக 2021.01.01ஆந் திகதி மற்றும் ஒருசில பயிலுநர்களுக்கு, அதன்பின்னரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. நாட்டில் நிலவிய COVID - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக அலுவலகங்கள் மூடப்பட்டிருத்தல். கொள்கை ரீதியான முடிவுகளின் படி வருகையை வரையறுத்தல் போன்ற காரணங்களினால் 2021.01.01ஆந் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அதிகமான உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்கள் கிடைத்தவுடன் உடனடியாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் பதவிகளுக்கு கடமையைப் பொறுப்பேற்க முடியாது போனதால் உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் செலுத்தல், தகுதிகாண் அறிக்கை தயாரித்தல் மற்றும் பிற நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி ஒருசில நிறுவனங்களில் இருந்து இன்னும் விசாரிக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக பின்வரும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகிறது.

(i) **சம்பளம் வழங்குதல்**

இந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பாக எனது இணையிலக்கம் மற்றும் 2021.03.26 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவுறுத்தல் வெளியிடப்பட்டிருந்தும் ஒருசில உத்தியோகத்தர்களுக்கு 2021ஆம் ஆண்டினுள் வழங்கப்பட வேண்டிய நிலுவைச் சம்பளம் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என எனக்கு தகவல் கிடைத்துள்ளது. மேற்படி கடிதம் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிலுவைச் சம்பளம் செலுத்தும் போது 2021.04.09 ஆந் திகதிக்கு முன்னர் சேவைக்கு சமூகமளித்துள்ள சகல உத்தியோகத்தர்களும் 2021.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் கடமையைப் பொறுப்பேற்றதாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2021.04.09 ஆந் திகதியின் பின்னர் நியமனக் கடிதம் வழங்கப்பட்டிருப்பின் மற்றும் நியமனக் கடிதத்தில் விசேடமாக குறிப்பிடப்படாதிருப்பின். அந்நியமனக் கடிதம் வெளியிடப்பட்ட திகதி முதல் 02 வாரங்களினுள் கடமைமையப் பொறுப்பேற்றுள்ள உத்தியோகத்தர்கள் 2021.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் பதவியில் கடமையைப் பொறுப்பேற்றதாக கருதி நடவடிக்கை எடுக்க முடியும். எனினும் நியமனக் கடிதத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் அல்லது வேறு காரணங்களின் அடிப்படையில் அவ்வாறு நடவடிக்கை எடுப்பது நியாயமற்றது எனக் காண்பதாயின், அதுபற்றிய தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை எனக்கு அனுப்பி உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பேற்றலை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திகதி தொடர்பில் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இங்கு 2021.01.01 ஆந் திகதி முதல் பயிற்சி சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக பயிற்சிக்காக சமூகமளித்துள்ளார் என்பதனை நிரூபிப்பதற்கு தொடர்புடைய சகல அறிக்கைகளையும் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு சேவைக்கு / பயிற்சிக்கு சமூகமளிக்காத நாட்கள் பற்றி குறித்த நிறுவனத் தலைவர்கள் மூலம் உறுதிப்படுத்தியதன் பின்னர் அந்நாட்களை உத்தியோகத்தரின் வருடாந்த லீவுகளைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும், உத்தியோகத்தர் சேவைக்கு / பயிற்சிக்கு சமூகமளிக்காத நாட்களின் எண்ணிக்கையை லீவுகளில் இருந்து சரிசெய்ய முடியாது எனக் காணுமிடத்து (சேவைக்கு / பயிற்சிக்கு சமூகமளிக்காமை தொடர்பில் நியாயமான காரணம் முன்வைக்கப்படவில்லையாயின், அல்லது வேண்டுமென்றே சேவைக்கு சமூகமளிப்பதில் இருந்து தவிர்ந்திருப்பதாக அறியப்படுமிடத்து) அந்நாட்களை கணக்கிட்டு சம்பளமற்ற லீவு நாட்களாக கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அதற்கமைய, உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்ட பயிலுநர் கொடுப்பனவு அல்லது சம்பளத்துடன் சரிசெய்து நிலுவைச் சம்பள அளவை மாத்திரம் உரிய விதிமுறைகளுக்கு

உட்பட்டு உத்தியோகத்தர் தற்போது பணியாற்றும் சேவை நிலையத்தினால் செலுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**(ii) <u>கடமையைப் பொறுப்பேற்றல்</u>**

எனது இணையிலக்கம் மற்றும் மற்றும் 2021.03.26 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளவாறு 2009.02.20 ஆந் திகதிய இலக்கம் 1589/30 கொண்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிப்படி அதன் 03 மற்றும் 04 ஆம் பின்னிணைப்பின் பிரகாரம் மாதிரிப் படிவத்தை பதிவிறக்கம் செய்வதற்கு MISCO என்ற அமைப்பின் மூலம் அப்போது வாய்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட 03 மற்றும் 04 ஆம் பின்னிணைப்புகளின் அச்சிடப்பட்ட பிரதிகள் உத்தியோகத்தர்களின் பிரத்தியேகக் கோவையில் கோப்பிடுவதற்கு நிறுவனத் தலைவர்களினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இவ்வாறு உரிய பின்னிணைப்பை பதிவிறக்கம் செய்து பிரத்தியேகக் கோவையில் கோப்பிடப்பட்டிராத உத்தியோகத்தர்கள் கடமையைப் பொறுப்பேற்று சேவை நிலையங்களிலிருந்து 03 மற்றும் 04 ஆம் பின்னிணைப்புகளின் படி அச்சிடப்பட்ட மாதிரிப் படிவங்களைத் தயாரித்து உத்தியோகத்தரின் பிரத்தியேகக் கோவையில் சேர்க்கப்பட வேண்டியுள்ளதால் அதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

மேலும், உத்தியோகத்தர் சேவைக்கு சமூகமளித்ததாக உறுதிப்படுத்தும் கடிதத்தில் கடமைக்காக அறிக்கையிட்ட திகதியைக் குறிப்பிட வேண்டிய இடத்தில், உத்தியோகத்தரின் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி முதல் கடமைக்காக அறிக்கையிட்டதாக உறுதிப்படுத்தும் வகையில் திருத்தங்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உதாரணம் : 01

- நியமனத் திகதி - 2021.01.01
- கடமையைப் பொறுப்பேற்றல் - இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் ................ மற்றும் ................... ஆந் திகதிய கடிதத்தின் படி 2021.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படும் வகையில் 2021.04.08 ஆந் திகதி கடமைக்கு சமூகமளித்தல்.

எவ்வாறாயினும், மேலே (i) ஆம் உபபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் 2021.01.01 ஆந் திகதி முதல் கடமையைப்

பொறுப்பேற்ற திகதி வரை சம்பளமற்ற காலப்பகுதியாகக் கருதி உத்தியோகத்தர்கள் கடமையைப் பொறுப்பேற்கும் திகதி 2022.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படக் கூடாது. அத்தகைய உத்தியோகத்தர்களின் நியமனம் மற்றும் கடமையைப் பொறுப்பேற்றல் நடைமுறைப்படுத்தப்படுவது கடமைக்காக சமூகமளித்த திகதியாகும்.

**(iii) வரலாற்றுத் தாள் தயாரித்தல் மற்றும் சம்பள ஏற்றங்கள் செலுத்தல்**

உத்தியோகத்தரின் வரலாற்றுத் தாளில் நியமனக் கடிதத்தின் படி நியமனத்தைப் பதிவிடும் போது மேலே உள்ள இலக்கம் (ii) இன் கீழ் குறிப்பிடப்பட்டவாறு 2021.01.01 திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் கடமையைப் பொறுப்பேற்றுள்ளதாக உறுதிப்படுத்தும் வகையில் சரியாகப் பதிவிடல் வேண்டும் என்பதோடு, சம்பளமற்ற லீவு பற்றிய விபரங்களை வரலாற்றுத் தாளில் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேலும், 2022 ஆம் ஆண்டுக்கான சம்பள ஏற்றத்தைச் செலுத்தும் போது, கடமைக்கு அறிக்கையிடுவதனை நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்கு இணையான சம்பள ஏற்றத்தை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இது தொடர்பான உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது.

உதாரணம் 01 :- வரலாற்றுத் தாள்

- கடமையைப் பொறுப்பேற்றலை பதிவு செய்தல் - இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் ...................... மற்றும் ..................... ஆந் திகதிய கடிதத்தின் படி 2021.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படும் வகையில் 2021.04.08 ஆந் திகதி கடமை நிமித்தம் சமூகமளித்தல்.
- 2022 சம்பள ஏற்றம் செலுத்துவதை பதிவு செய்தல்
    - சம்பள ஏற்றத்தை அங்கீகரித்த திகதிக்கு முன்னால் “2021.01.01 ஆந் திகதிக்கு உரித்தாகும் சம்பள ஏற்றத்தை செலுத்துதல்" என்றவாறு பதிவு செய்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், மேலே (i) ஆம் உபபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் 2021.01.01 ஆந் திகதி முதல் கடமையைப் பொறுப்பேற்ற திகதி வரையில் சம்பளமற்ற காலப்பகுதியாகக் கருதும்

உத்தியோகத்தர்கள் மேலே (ii) ஆம் உபபந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு நியமனம் மற்றும் கடமையைப் பொறுப்பேற்றல் நடைமுறைப்படுத்தப்படுவது கடமைக்காக அறிக்கையிடும் திகதி என்பதால், அதற்கமைய வரலாற்றுத் தாளில் பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் சம்பள ஏற்றத்தை கடமைக்கு அறிக்கையிட்ட திகதிக்கு இணங்கவே செலுத்தப்படுதல் வேண்டும்.

**(iv) பிற நிறுவன நடவடிக்கைகள்**

மேலும், இந்த உத்தியோகத்தர்களின் பட்டச் சான்றிதழை குறித்த பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி தாமதமின்றி உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சகல திணைக்களினதும் தலைவர்களும் தங்களது விசேட கவனத்தை செலுத்துதல் வேண்டும்.

மேலும், உத்தியோகத்தர்களின் லீவு தொடர்பாக செயற்படும் போது 2021.01.01 ஆந் திகதிக்குப் பின்னர் தமது பயிற்சிக் காலத்தினுள் மற்றும் நிரந்தர நியமனம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் சேவைக்கு சமூகமளிக்காது இருந்த காலப் பகுதிக்கு பொது நிருவாக சுற்றறிக்கை 02/2021(VII) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு மேலும் நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத்தருகிறேன்.

ஒப்பம் / எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்